விலை இரண்டணா

# ருஷிய : : : : புரட்சி



எஸ். சையது அஹமது
எழுதியது

# முகவுரை.

உலக படத்தை எடுத்துப்பார்த்தால், வடக்கே ஐரோப்பாவிலும், ஆசியாவிலுமாகப் பரவி விளங்கும் பிரமாண்டமான ருஷியா தேசத்தைக்காணலாம். அது, சுமார் 83, 36, 864 சதுர மைல் பரப்பளவு கொண்டது. தேசம் பெரியதாயினும் ஜன நெருக்கம் அதிகமில்லை. அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 16 கோடி. பெரும் பாகமான நிலம் மக்கள் வாசத்திற்கு லாயக்கற்றதாய் இருப்பதே இதற்குக் காரணம்.

நமது தேசத்தைப்போல் ருஷியாவும் விவசாய நாடு. ருஷியர்களில் 100க்கு 83 பேர் விவசாயிகள். நம்மவர்களைப்போல் அவர்களும் கிராமங்களிலேயே அதிகமாக வசிக்கிறார்கள்.

அத் தேசத்தில் தற்போது நடந்துவரும் ஆட்சிக்கு ' ஐக்கிய அபேதவாத சோவியத் குடியரசு ' (Union of Socialist Soviet Republics.) என்று பெயர். அபேதவாதம் என்றால் தொழிலாளி, முதலாளி என்ற பேதமற்றிருத்தல் என்று அர்த்தம். சோவியத்என்பது, நமது கிராமப்பஞ்சாயத்து போன்ற ருஷியா தேசத்து கிராம சபை. (சோவியத் என்னும் ருஷிய பதத்திற்கு சபை என்பது பொருள்.) அந்த ஐக்கிய அபேதவாத சோவியத் குடியரசில், ஏழையென்றோ, பிச்சைக்காரனென்றோ, பணக்காரனென்றோ யாருமில்லை. ஆண், பெண் எல்லோரும் சரிசமம். எல்லா நிலமும் எல்லாருக்கும் பொதுவானது. எல்லாரும் உழைக்கவேண்டும். அவரவர் உழைப்புக்கேற்ற உரிமைகள் உண்டு. கைகட்டிக்கொண்டு சோம்பியிருப்பவர்களுக்கு அங்கே உணவில்லை. ஆகையால் அதை பொதுவுடைமை ஆட்சி என்றும் சொல்லுவதுண்டு. அத் தேசத்தில் ஒரு குழந்தை பிறந்துவிட்டால், அதை, போஷிக்கவேண்டியதும், கல்வியளிக்கவேண்டியதும், வயதடைந்தபின் வேலை தரவேண்டியதும், உணவு, உடை, உறைவிடம் அளிக்கவேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இத்தகைய நவீன ஆட்சி ஏற்படுவதற்கு முன் அத் தேசத்தை அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களுக்கு "ஜார்" என்னும் பட்டமுண்டு. கடைசியாக அரசாண்ட ஜாரின் ஆட்சி கொடுங்கோன்மையானது. ஆதலால் ஏழைகள் ஒன்றுகூடி ஜாரை எதிர்த்துக்கொன்று மேற்சொன்ன ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டார்கள். இச் சம்பவத்தைத்தான் 'ருஷியப் புரட்சி' என்பது. 1917ஞு பிப்ரவரிமீ ஜார் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. அதற்கு எட்டு மாதங்களுக்குப் பின் பொதுவுடைமை ஆட்சி தோன்றிவிட்டது. இந்த எட்டு மாதச் சம்பவங்களை எடுத்துச்சொல்லுவதே இச்சிறு நூலின் நோக்கமாகும்.

சோவியத் ஆட்சியில் சிறந்த அம்சங்கள் இருந்தபோதிலும், அந்த ஆட்சியை ஏற்படுத்திய புரட்சியில் பலாத்காரம் கையாளப்பட்டது. தெருச் சண்டைகளால் ரத்தக்களரி ஏற்பட்டது. ஆயிரக் கணக்கானபேர் மாண்டனர். இத்தகைய ஹிம்சை, தற்போது வெறுக்கப்படுகிறது. அஹிம்சையே, தற்கால தாரக மந்திரமாகும். பிணக்குவியல்மீது எழுப்பப்படும் ஆட்சி, மக்களுக்கு நிரந்தரமான நன்மையளிக்காது என்று கருதப்படுகிறது. தற்கால சோவியத் ஆட்சியும், பூரணமாக வெற்றி பெற்றுவிடவில்லை. பரீக்ஷார்த்தமாகவே இப்போது நடைபெறுகிறது. அதைக் காத்திருந்து பார்ப்போம்.

இம் முதற்பாகத்தில், புரட்சிக்கு மூலகாரணமாயிருந்த சம்பவங்களையும், புரட்சி தோன்றி ஜார் ஆட்சி கவிழ்க்கப்படுவதையும், அதற்குப்பின் புதிய ஜனநாயக ஆட்சி ஏற்படுவதையும், அந்த ஆட்சியும் பொது ஜனங்களுக்குத் திருப்தியளிக்காததால் பொதுவுடைமை கோஷ்டியின் தலைவராகிய லெனினால் எதிர்க்கப்பட்டு அது பலவீனமடைவதையும், லெனின் ஆட்சி வலுவடைவதையும் விவரித்திருக்கின்றேன். இத்துடன் இம் முதற்பாகம் முடிவடைகிறது. அடுத்த பாதி சரித்திரம் இரண்டாம் பாகத்தில் கூடியசீக்கிரம் வெளிவரும்.

மதுரை
1—2—34

எஸ். சையத் அஹமத்.
(ஆக்கியோன்.)

# ருஷியப் புரட்சி.

## முதற் பாகம்.

---

### புரட்சிக்கு முன் தேச நிலை.

தற்போதைய சோவியத் ஆட்சி ஏற்படுவதற்கு முன் ருஷியா தேசம், கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மிக மிக பிற்போக்கடைந்திருந்தது. ருஷியப் பொதுஜனங்கள், உலக நிகழ்ச்சிகளை அறியாதவர்களாய் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். விவசாயம் விருத்தியடையாதிருந்தது.

கடைசியாக அரசாண்ட ஜார், 'இரண்டாவது நிக்கொலஸ்' என்பவர். அவர் ஆட்சியில் ஏழைகள் சொல்லி முடியா துன்பத்திற்கு ஆளானார்கள். அரசாங்க அதிகாரிகளும், ஜாரின் சிநேகிதரான முதலாளிகளும், பாதிரிகளும் தொழிலாளரையும், விவசாயிகளையும் உதைத்தும், மிதித்தும் ஹிம்சித்தார்கள்; சுட்டுக்கொன்றார்கள். ஜார் அவைகளையெல்லாம் பொருட்படுத்தாதிருந்ததோடு அச் செயல்களை ஆதரித்தும் வந்தார். ஏழைகளை அடக்குவோரைக் கண்டால் அவருக்குப் பரம சந்தோஷம். நாடு பசிப்பிணியால் வாடுவதை அவர் லக்ஷியம் பண்ணுவதேயில்லை.

'அரசியலில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு, நாடு அல்லோல கல்லோலப்படும்போது கூட அவருடைய டைரியில் கீழ்காணும் குறிப்புகளே காணப்பட்டன:— ' இன்று குஷாலாகக் காலங் கழித்தேன்—இரண்டு காக்கைகளைச் சுட்டேன்—தேநீர் அருந்தினேன்—காற்று நன்றாயிருந்தது படகில் சென்றேன்—நீந்திக் குளித்தேன்—கோவிலுக்குப் போனேன்—தேநீர் குடித்தேன்.'—இவ்வாறாகவே அவர் காலங்கழித்து வந்தார்.

## 1905-வது வருஷப் புரட்சி.

1905-வது வருஷம், பொதுஜனத் தலைவர்களால் ஜாருக்கு விரோதமாகப் புரட்சி தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அது அரசாங்கத்தாரால் சீக்கிரம் அடக்கப்பட்டு விட்டது. அதில் கலந்துகொண்ட தலைவர்களில் அநேகர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். அநேகர் நாடு கடத்தப்பட்டனர்.

## ருஷியாவும், மஹாயுத்தமும்.

1914ம் வருஷம் ஜெர்மனி தொடுத்த உலக மஹாயுத்தம் ஆரம்பமாகவே ஜார், ஜெர்மனிக்கு விரோதமாக நேச தேசத்தாரோடு சேர்ந்து ருஷியாவையும் யுத்தத்தில் ஈடுபடச்செய்தார். ருஷியர்களோ யுத்தத்துக்கு லாயக்கற்றவர்களாய் இருந்தார்கள்,

ஆகையால் அவர்களுக்கு மிகுந்த சேதமேற்பட்டது. 20 லக்ஷத்துக்கு மேற்பட்ட ருஷிய போர்வீரர் யுத்தகளத்தில் மாண்டுவிழுந்தனர். தங்கள் போர் வீரரின் தோல்வியைக்கண்டு ருஷிய அதிகாரிகள், படைத் தலைவர்களைக் குற்றஞ்சாட்டினார்கள். படைத் தலைவர்கள் ஆக்ரோஷங்கொண்டு போர்வீரர்களைச் சாட்டைகொண்டு விளாசத் தொடங்கினார்கள். அப்படிச் செய்வதால் சிப்பாய்களை யுத்த உணர்ச்சி கொள்ளும்படிச் செய்யலாமென்பது அவர்கள் அபிப்பிராயம். இச் செயல் போர்வீரரிடையே அதிருப்தியை அதிகரிக்கச் செய்தது. ஆகவே அவர்கள் ஆத்திரங்கொண்டு தங்கள் தலைவர்களைத் தாக்கத் தலைப்பட்டார்கள். துப்பாக்கி சனியனால் அநேக சிப்பாய்கள், தங்கள் அதிகாரிகளைக் குத்தித் தூக்கினார்கள். அநேகர், அதிகாரிகள் ஆணையை மீறி ஆகாயத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு வீட்டை நோக்கிக் கலைந்து போனார்கள். சேனையின் ஒழுக்கம் பாழாயிற்று. அலுத்துப்போய் எல்லாரும் சமாதானத்தையே விரும்பி நின்றனர்.

## கபட சந்நியாசி 'ரஸ்புட்டீன்'.

நிலைமை இவ்வாறிருக்கையில், எரிகிற தீயில் எண்ணெய் சொரிவதைப்போல், ஜார் கொடுங்கோன்மையும், யுத்தக்கொடுமையும் போதாவென ரஸ்புட்டீன் எனும் ஒரு கொடிய துன்மார்க்கனின் அட்டூழியமும் தோன்றியது. அவன் ஒரு ஏழை; மாந்திரீக சக்திவாய்ந்தவன். அவன், ஒரு பெரிய பக்தனைப்போல் நடித்து, மதகுரு வேடந்தரித்து, மூடநம்பிக்கைகளில் திளைத்துக்கிடந்த ஜாரின்

குடும்பத்தைத் தன் செல்வாக்கால் அடக்கியாள ஆரம்பித்தான். ஜாரும், சக்ரவர்த்தினியாகிய 'ஜாரிணு'வும் அவன் சொன்னபடி ஆடும் பொம்மையானூர்கள். ரஸ்புட்டீன், தான் விரும்பியவர்களைப் பெரிய பெரிய பதவிகளில் நியமிக்கவும், விரும்பாதவர்களை நீக்கவும் தலைப்பட்டான். ஜார் குடும்பத்தை துன்மார்க்கர்களே சூழ்ந்துகொண்டார்கள். ரஸ்புட்டீன், இரவும், பகலும் நன்ருகக் குடித்துவிட்டுப் பெரிய பெரிய குடும்பங்களிலுள்ள பெண்களையெல்லாம் மானபங்கப்படுத்தலானுன். பொது மக்கள் நெஞ்சு கொதித்து கடைசியாக 1916ஞ் டிசம்பர்மீ 16உ இரவு அக் கபட சந்நியாசி சுட்டுக்கொல்லப்பட்டான். அவன் கொலையிலிருந்து ருஷியப் புரட்சி தொடங்கிவிட்டதாகக் கூறலாம். அவன் கொலை செய்யப்பட்ட 10 வாரங்களுக்குப் பின் ஜார் ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது.

## யுத்தத்தின் விளைவு.

மஹாயுத்தம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்ததால் தேச வருமானம் யாவும் யுத்தத்திற்கே செலவழிக்கப்பட்டு வந்தது. யுத்த தளவாடங்கள் செய்வதிலேயே எல்லோரையும் அரசாங்கம் ஈடுபடச் செய்தது. இதர கைத்தொழில்களும், விவசாயமும் ஸ்தம்பித்துவிட்டன. போக்குவரத்து சாதனங்கள் குறைந்துவிட்டன. ஜனங்களுக்கு ரொட்டி கிடைக்கவில்லை. உணவுப் பொருள்களுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இங்கிலேயில், கைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளருக்குக் கூலியும் கொடுபடவில்லை. ஆகவே எல்லாத் தொழிலாளரும் வேலை நிறுத்தஞ்

செய்தனர். எங்கும் அதிருப்தியும் குழப்பமும் அதிகரித்தது. தொழிற்சாலைகளுக்கு முன்பாக, தொழிலாளர் ஆர்ப்பாட்டஞ் செய்யத் தொடங்கினார்கள். பெண்கள் ரொட்டிக்கிடங்குகளுக்குச் சென்று 'ரொட்டி! ரொட்டி!!' என்று கதறினார்கள். ஏதாவது ஏற்படவேண்டும் என்று எல்லாரும் விரும்பினர்.

## புரட்சி.

1917ஆ பெப்ரவரி 27உ சர்வதேசப் பெண்கள் தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பொதுக்கூட்டங்களும், பிரசங்கங்களும் நடைபெறுமென எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அன்று, ஜாரைக் கவிழ்க்கப்போகும் பெரும் புரட்சியின் ஆரம்ப நாளாகுமென ஒருவரும் நினைக்கவேயில்லை.

1917ஆ பெப்ரவரி 27உ சூரியன் தனது கிரணங்களைப் பரப்பிக்கொண்டு கீழ் திசையில் தோன்றினன். அன்றைய தினம்,உலக சரித்திரத்திலேயே மிகவும் விசேஷ தினமாகப் போவதால்,சிறிது கர்வத்துடனே அவன் விளங்கினன். ஆனல் அன்று நடக்கப்போகும் புதிய பெரிய ருஷியப் புரட்சியைக்காண விரும்பாதவன்போல் மேகங்களில் மறைந்திருந்தான்.

'பெட்ரோகிரேட்' நகரம் பனிக்கட்டியால் மூடப்பட்டு கிடந்தது. தெருவில் அதிக ஜன நடமாட்டமில்லை. ஒரு சிலர் மட்டும் குளிரால் நடுநடுங்கிக்கொண்டு, தலையில் பெய்யும் பனியைத் தாங்கமுடியாமல் தலைகுனிந்து சென்றனர். ஜனங்கள் எல்லாரும் அன்று ஏதோ விபரீதம் விளையப்போவதாகக் கருதினர்.

ருஷிய சைனியமொன்று, ஆயுதங்களோடு பெட்ரோகிரேடுக்கு, அதிகாரியின் ஆணையை மீறி வந்திருந்தது. ஜார் ஊரிலில்லை. பெரும்பான்மையான தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்திருந்தனர். ஏழைகள் பசிப்பிணியால் கோபமடைந்திருந்தனர். ரொட்டி ஜனங்களுக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை. எங்கும் ஆத்திரமும், கோபமும் காணப்பட்டது.

ஒருவருக்கும் வேலையுமில்லை, உண்ண உணவுமில்லையென்றால் என்ன செய்வார்கள்? பெண்கள், தெருவில் உறைந்துகிடக்கும் பனிக்கட்டிகளில் தடுமாறினர்கள். குழந்தைகள் மூர்ச்சையடைந்தன. சட்டசபையாகிய 'டூமா'வின் அங்கத்தினர்கள், சுருங்கிய முகத்துடன் இரவு முழுதும் கண் விழித்துக்கொண்டு நிலைமையைச் சமாளிக்கமுடியாமல் திகைத்துக்கொண்டிருந்தனர்.

கொஞ்சம் சூரியன் கீழ்திசையில் உயர்ந்ததும், மெல்ல மெல்ல ஒரு ஊர்வலம் சிகப்புக் கொடிகளை ஏந்திக்கொண்டு 'யுத்தம் ஒழிக! அரசாங்கம் வீழ்க!' என்று முழங்கிக் கொண்டு வீதியில் சென்றது. போலீஸ்காரர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் கேட்டதையும், கேட்காததையும் போல் தங்கள் தங்கள் காரியங்களில் ஈடுபட்டிருந்தனர்.

திடுமென, யுத்த களத்திலிருந்து உத்திரவை மீறி ஆயுதங்களுடன் வந்திருந்த சேனை வீரர்கள், துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு வீதிகளில் நுழைந்தனர். புரட்சி கோஷம் செய்துகொண்டு ஆவேசத்தோடு சென்றனர். வேடிக்கை பார்க்கக் கூட்டங் கூடிற்று. கலகமோ! அடிதடியோ! புரட்சியோ! என்று எல்லாரும் பிரமித்தனர்.

இதைக் கேள்விப்பட்டதும், போலீஸார் ஆயுதங்களோடு அரண்மனைக்குச் சமீபத்திலிருந்த மைதானத்தில் வந்து கூடினார்கள். டிராம் வண்டிகளெல்லாம் நிறுத்தப்பட்டன. உத்திரவைமீறி,குறுக்கும் நெடுக்குமாய்ப்போகும் ஜனத்திரளை போலீஸார் துப்பாக்கியை எடுத்து நீட்டி போகும்படிக் கூறினார்கள். சில பெண்கள் கூட்டத்திற்கு முன்வந்து, 'நாங்கள் ரொட்டியில்லாமல் கஷ்டப்படுவதால் நீங்கள் சுடப்போகிறீர்களா?' என்று கேட்டனர். எங்கும் அமளி ஏற்பட்டது. அதிகாரி 'சுடு' என்று உத்திரவிட்டார். 'டுமீல் டுமீல்' என குண்டுகள் பறந்தன. ஏழைத் தொழிலாளர், பெண்டு பிள்ளைகளுடன் தங்களைக் காத்துக்கொள்ள அலங்கோலமாய் ஓடத் தலைப்பட்டனர். பலர், தரையோடு தரையாய்ப் படுத்துக்கொண்டனர். ஒரு மாணவன்மீது குண்டுபட்டு திரேகத்திலிருந்து ரத்தம் சொட்டத் தொடங்கியது. இதைக்கண்ட ஒரு இளம்பெண் 'உங்கள் தோழர்களையே சுட முற்பட்டு விட்டீர்களா? உங்கள் அண்ணன், தம்பி,மனைவி மக்களையே கொல்லத் துணிந்துவிட்டீர்களா?' என்று கோபப்பொறி பறக்க ஆத்திரத்துடன் எதிர்த்து நின்று கேட்டாள்.

ஊரெங்கும் அமளி நடக்கிறதென்று கேள்விப்பட்ட தலைவர்கள் ஓடோடியும் வந்தனர். வீதியில் வெள்ளிப் பனியின்மீது, ஓர் குதிரை, குண்டு பட்டு ரத்தம் ஒழுக அலங்கோலமாய் இறந்துகிடந்தது. அதை கவனிப்பார் யாருமில்லை.

போலீஸார் மட்டுமே ஜனங்களைச் சுட்டனர். போர் வீரர்கள், ஆகாயத்தை நோக்கியே குண்டுப்பிரயோகம் செய்தனர். போர்வீரரும், போலீஸாரும் சந்திக்கவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருபுறம் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

வீடுகளும், ஆபீஸுகளும், தொழிற்சாலைகளும் குண்டு பட்டுச் சேதமடைந்தன. மாணவர்களும், மாணவிகளுங்கூட குழப்பத்தில் கலந்துகொண்டனர். எங்கும் ஓட்டமும் திகிலுமாகவே யிருந்தது.

நாடெங்கும் தந்திகள் பறந்தன. காட்டுத் தீபோல் செய்தி எட்டியது. ஆங்காங்கிருந்த தொழிலாளர், வேலையற்றோர், ஏழைகள் எல்லோரும் ஆத்திரங்கொண்டு வெளியே கிளம்பினார்கள்.

கொஞ்ச நேரம் அமைதியாயிருப்பதும், பிற்பாடு 'டுமீல்' என குண்டு சப்தம் கேட்பதுமாயிருந்தது. அன்று ஒரு காரியமும் நடைபெறவில்லை. அநேகர் பட்டினி கிடந்தார்கள். அநேகர் உயிரிழந்தார்கள். அநேகர் அங்கஹீனமடைந்தார்கள். எல்லாரும் 'கம்' என வீடுகளில் அடைபட்டுக் கிடந்தனர். என்ன நடந்துகொண்டிருக்கிறதோ? என்ன நடக்குமோவென்ற திகிலே அனைவருக்கும் இருந்தது. ஆபீஸ்களெல்லாம் திறந்தபடியே கிடந்தன. ஒருவரும் அங்கே கிடையாது. தொழிற்சாலைகள் மூடப்பட்டு கிடந்தன. ஒரு கடையும் திறக்கவில்லை. இவ்வாறாக அன்று சாயங்காலம் கிட்டியது. சூரியனும் மறைந்தான்.

## இரண்டாம் நாள்.

அன்று இரவு பெட்ரோகிரேட் நகர வாசிகள் உறங்கவே யில்லை. மறுநாள் காலை விடிந்ததும், எல்லாரும் மச்சுகளிலிருந்து ஜன்னல்களின்வாயிலாக வீதியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதல் நாள் ரொட்டியில்லாது பட்டினி கிடந்தவர்கள், ஆவலோடு ரொட்டிக் கிடங்குகளுக்குப் போனார்கள். அந்தோ! எல்லா கிடங்குகளும், கடைகளும் மூடிக் கிடந்தன. குழந்தைகள் பட்டினியால் அவதிப்படுவதைத் தாய் தந்தையரால் சகிக்க முடியவில்லை. ஆத்திரம் பொங்கியது. என்ன செய்வார்கள்?

யுத்த களத்திலிருந்து வந்த சேனையின் செயலைக் கேள்விப்பட்டு, பெட்ரோகிரேட் நகரத்தில் இருந்த சேனை வீரர்களும், தலைவர்களின் கொடுமைகளிலிருந்து விடுபட்டு சுயேச்சையோடிருக்கும் தமது சகாக்களோடு சேர்ந்து கொள்ள ஆசைப்பட்டனர். சேனைத் தலைவர், குழப்பத்தை அடக்குவதற்காக அப் படை வீரரை வரிசையாக நிறுத்தி, ஆயுதங்களைத் தந்து 'மார்ச்' என்று இரைந்தார். உடனே 'டுமீல் டுமீல்' என குண்டுகள், சேனை வீரர்களுடைய துப்பாக்கிகளிலிருந்து தலைவரை நோக்கிப் பறந்தன. தலைவர், தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடி மறைந்தார். எல்லாரும் புரட்சிகோஷம் செய்துகொண்டு ஊருக்குள் நுழைந்தனர். ஜனங்கள், சேனை வீரர்களெல்லோரும் தங்கள் பக்கம் சேருவதைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சி கொண்டனர். எல்லாருமாகச்சேர்ந்து, சர்க்கார் ஆயுதச்சாலையில் நுழைந்து எல்லா ஆயுதங்களையும் கொள்ளையடித்தனர். கூடவந்த

தொழிலாளருக்கும், மாணவருக்கும், ஆயுதங்களும், மருந்தும் தாராளமாக வழங்கினர். தெருவில் ஓடும் உத்தியோகஸ்தர்களின் மோட்டார்களேயும், டிராம்களையும் நிறுத்தினர். சர்க்கார் காரியாலயங்களில் புகுந்து உத்தியோகஸ்தர்களை நோக்கிச் சுட்டனர்.

சிலர், சிறைச்சாலைகளுக்குப்போய், கைதிகள் எல்லாரையும் விடுவித்தனர். பெண்களும் குழப்பத்தில் கலந்துகொண்டனர். அவர்களும் சேனை வீரர்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பெற்றுக்கொண்டு சுட ஆரம்பித்தனர்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தங்கள் உயிரைப் பாதுகாப்பதற்காக பந்தோபஸ்தான இடங்களுக்குப் போய் ஒழிந்துகொண்டனர். கலகக்காரர்கள், சட்ட சபையாகிய டூமாவை வளைத்துக்கொண்டனர். இதைக்கண்டதும் அங்கிருந்த உத்தியோகஸ்தர், ரகசியவழியாகத் தப்பியோடினர். சிலர் குண்டு பட்டு மாண்டனர். கலகக்காரர்கள், ஜார் அரசாட்சிக்கு ஆதரவளித்தவர்களையும், பணக்காரர்களையும் பாதிரிகளையும் கொன்று பழிவாங்க ஆக்கிரங்கொண்டு அவர்கள் இருப்பிடங்களிலெல்லாம் போய்த் தேடினர். சிலர் அகப்பட்டனர்; சிலர் அகப்படவில்லை. கலகக்காரர்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்குச் சென்று தீயிட்டனர். அன்று மத்தியானம் 12 போலீஸ் ஸ்டேஷன்கள் ஜ்வாலைவிட்டு எரிந்துகொண்டிருந்தன. அன்று சாயங்காலம்வரை 'டுமீல் டுமீல்' என சப்தம் கேட்டுக்கொண்டே யிருந்தது.

## மூன்றும் நாள்.

மூன்றும் நாள் விடிந்தபோது போலீஸ் ஸ்டேஷன்களெல்லாம் சாம்பலாய்க் கிடந்தன. சர்க்கார் காரியாலயங்களில் அநேகம் குண்டுகளால் தொளைக்கப்பட்டும், சின்னபின்னப்படுத்தப்பட்டும் போயிருந்தன. நீதி மன்றம் இன்னும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அதிகாரம்பெற்ற அரசாட்சி ஒன்றும் ஏற்படவில்லை. ஏற்கனவே மந்திரி சபையிலிருந்தவர்கள் எதையும் செய்ய அசக்தர்களாயிருந்தார்கள். "டூமா" சபை அங்கத்தினர் இருந்தவிடம் தெரியவில்லை.

புரட்சி நடக்கும் "பெட்ரோகிரேட்" நகரத்திலிருந்து வெகுதூரத்தில் ரயில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஜார் புரட்சிச் செய்தியை மூன்றும் நாள் வரை கேட்கவேயில்லை. அவருக்குப்போன தந்திச் செய்திகளையெல்லாம் அவருடனிருந்த ஒரு அதிகாரி வாங்கி வைத்துக்கொண்டு அவருக்குக் காண்பிக்கவேயில்லை. திடுமென தோன்றியிருக்கும் குழப்பம், சிறு கலகமாயிருக்கலாமென்றும், வெகு சீக்கிரத்தில் அது அடக்கப்பட்டுவிடும் என்றும், அதைத் தெரிவித்து ஜாரைக் கலவரப் படுத்தவேண்டாம் என்றும் அந்த அதிகாரி நினைத்ததே காண்பியாததற்குக் காரணமாகும். தந்திகளைப் பெற்றுக்கொண்டு தாமே அந்தக் குழப்பத்தை அடக்கிவிடும்படி கடுமையான உத்திரவு அனுப்பிவிட்டார். மூன்று நாளாய் குழப்பம் அடக்கப்படவில்லையென்றும், எல்லா சேனைவீரர்களும், புரட்சிக்காரர்களுடன் கலந்துகொண்டனரென்றும், அரசாங்கம் அசைக்

கப்பட்டுவிட்டதென்றும் கேள்விப்பட்ட பின்பே அந்த அதிகாரி, ஸ்பெஷல் ரயிலிலேயே ஜார் சக்ரவர்த்தியை தங்கும்படிக்கும், அதை விட்டிறங்கா திருக்கும்படிக்கும் ஏற்பாடு செய்துவிட்டு, அந்த வண்டி எங்கிருக்கிறதென்று ஒருவருக்கும் செய்தி எட்டக்கூடாதென எல்லா ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கும் உத்திரவிட்டார். இத்தனையும் செய்த பின்னர், நடுக்கத்துடன் தந்திகளை சக்ரவர்த்தியிடம் நீட்டினர்.

ஜார் ஆச்சரியத்தோடும், சலவரத்தோடும் அவைகளைப் படித்து முடித்தார். அவர் முகத்தில் கோபப்பொறி பறந்தது, மீசை துடிதுடித்தது. 'என்னை நீக்க இவர்களுக்கு (குடிஜனங்களுக்கு) என்ன அதிகாரம் இருக்கிறது'? என்றார். ஜார், தமது சர்வாதிகாரத்தில் அதிக நம்பிக்கையுடையவர். கடவுளே ராஜாக்களை, அரசாள ஏற்படுத்துகிறார் என்றும், அந்த ராஜாக்களை ஜனங்கள் ஏற்று, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்றும் எண்ணிக் கொண்டிருப்பவர்.

ஜார், கலகத்தைக் கடுமையாக அடக்கும்படி உத்திரவிடச்சொன்னர். ஏற்கனவே உத்திரவு கொடுத்தாய் விட்டதாகவும், எல்லா சேனைவீரர்களும், ஜனங்களுடன் சேர்ந்து கொண்டு விட்டதாகவும் அதிகாரி தெரிவித்தார்.

நிற்க, அன்று சில புதிய போர்வீரர்களும், புரட்சிக்காரர்களுடன் சேர்ந்தனர். அன்று, லட்சம் போர்வீரர்கள் தங்கள் அதிகாரிகளிடமிருந்து விடுதலைபெற்று சுயேச்சை

யோடிருந்தனர். அவர்கள் நெஞ்சங்களில் ஆவேசம் அதிகம் இருந்தது. துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு கூட்டங்கூட்டமாய்ப் புறப்பட்டனர்.

சூரியன் கொஞ்சம் மேலே கிளம்பிய பின், ஒரு கூட்டம், ஆத்திரத்தோடு மாஜி பிரதம மந்திரியின் மாளிகையில் நுழைந்து வயது முதிர்ந்த அவரை 'ஸ்டர்மர்' அரண்மனைக்கு இழுத்துச் சென்றது. ரகஸிய போலீஸார் சர்க்கார் காரியாலயங்களுக்குள்ளிருந்து ஜன்னல் வழியாகப் புரட்சிக்காரர்களைச் சுட்டார்கள்.

ஜனங்கள் வெளியே புறப்படுவது ஆபத்தாயிருந்தது. போர்வீரர் தங்கும் ஹோட்டலில், அநேக அதிகாரிகள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வந்து சரண்புகுந்தனர். அவர்கள் அங்கே இருப்பதாகக் கேள்விப்பட்ட புரட்சிக்காரர்கள், அந்த ஹோட்டலை வளைத்துக்கொண்டார்கள். 'டுமீல் டுமீல்' என குண்டுகளைப் பொழிந்தார்கள். கதவுகள் தகர்க்கப்பட்டன. ஆத்திரத்தோடு அத்தனைபேரும் உள்ளே நுழைந்தார்கள். கடும்போர் நிகழ்ந்தது. எல்லா அதிகாரிகளும் சரணடைந்தார்கள். சிலர் தப்பியோடினார்கள்.

அந்த ஹோட்டலில் சாராயப்பீப்பாய்கள் வைத்திருந்த அறையில் புரட்சிக்காரர்கள் புகுந்து, எல்லா பீப்பாய்களிலிருந்த சாராயத்தையும் கீழே கொட்டினார்கள். புரட்சிக்கார தோழர்கள் சந்தோஷப்பெருக்கால் சாராயத்தை அளவு கடந்து குடித்துவிட்டு தகாத காரியங்களைச் செய்துவிடக்கூடும் என்றே அவ்விதம் செய்தார்கள். மூன்று நாட்களாய்

புரட்சி நடந்துகொண்டிருப்பினும் ஒரு சொட்டு சாராயங் கூட புரட்சிக்காரர் அருந்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மாலையில் சிறிது அமைதி ஏற்பட்டது. ஆனால் வண்டிப்போக்குவரத்து ஏற்படவேயில்லை. டிராம்கள் நடு வீதிகளிலேயே நின்றுகொண்டிருந்தன. தந்தி ஆபீஸ்கள் புரட்சிக்காரர் வசமாயின. ஆபீஸில் குவியல் குவியலாகத் தந்திகள் குவிந்திருந்தன.

பணக்காரர்கள் வீடுகளிலிருந்த உணவுப் பொருள்கள் யாவும் வெளியே கொண்டுவரப்பட்டன. எல்லாருக்கும் ரொட்டிக்காக கோதுமைமாவு அள்ளி அள்ளி கொடுக்கப் பட்டது. ரொட்டியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த வர்கள் எல்லாரும் மாவைக்கொண்டுபோய் ரொட்டி சுட்டுத் தின்றனர். இதர உணவுப்பொருள்கள் யாவும் விலை சரச மாக விற்கப்பட்டன. எல்லாரும் திருப்தியாக உணவு உட்கொண்டனர். ஆனந்தப்பெருக்கை அளவிட்டுச் சொல்ல முடியாது. போர்வீரர்கள் சுடுவதை நிறுத்தினர். தெருவில் ஒவ்வொருவரும் கட்டித்தழுவி சந்தோஷங்கொண்டாடினர் கள்.

## அமைதி.

அடுத்த நாள் அமைதி ஏற்பட்டது. பொதுஜனங்கள் இனி குழப்பம் செய்யாது, அமைதி நிலவ பாடுபடவேண்டு மென்று தொழிலாளர் சங்கத்திலிருந்து அறிக்கையொன்று வெளிவந்தது. சட்டசபை ஹாலில் ஏழைகளுக்கென்று

கொண்டுவரப்பட்ட மாவு மூட்டைகள் குவிந்து கிடந்தன. திரள் திரளாகத் தொழிலாளரும், ஏனையோரும் மாவைப் பெற்றுச் சென்றனர்.

வீதிகளில் எங்கும், ஜனங்கள், கும்பல் கும்பலாகக்கூடி புரட்சியைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஹோட்டல்களிலும், இதரவிடங்களிலும் தொங்கிக்கொண்டிருந்த ஜாரின் உருவப்படங்களையும், கொடிகளையும் எடுத்து நடுத்தெருவில் தீயிட்டுக் கொழுத்தினார்கள். சில தினங்களுக்கு முன் அதிகாரம் செய்துகொண்டிருந்தவர்கள், கைதிகளாகி போர்வீரர்சூழ டூமா சபையில் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நின்றுகொண்டிருந்தார்கள்.

## ஜார் பட்டந்துறத்தல்.

சில தினங்களுக்குப்பின், மார்ச்சுமீ 15வ மாலை 3 மணிக்கு, ஜார் பட்டத்தைத் துறந்துவிட்டார் என்னும் பரபரப்பான செய்தி வெளியாயிற்று. எல்லாருடைய உள்ளத்திலும் இச்செய்தி, எழுச்சியையும், மட்டிலா மகிழ்ச்சியையும் உண்டாக்கிற்று.

சிலதினங்களுக்குமுன் சுமார் 15கோடி பேர் கொண்ட ருஷியாவில் சர்வாதிகாரம் நடத்திவந்த ஜார், இன்று ஒருவரும் கவனிப்பாரற்று, உயிருக்கு அஞ்சி ஸ்பெஷல் ரயிலில், எங்கு இறங்குவது? எங்கு போவது? என்ன செய்வது? என்று தோன்றாது தவித்தார். 'யாரது?' என்றவுடன் வாய்பொத்தி, கைகட்டி, தலைகுனிந்து விரைந்து வந்து "எஜமானர் உத்திரவு யாதோ!" என்று வினவி

நிற்கும் ஏவலாட்களைப்பெற்ற ஜார், இன்று ஆகாரம் கொடுக்கவும் ஆளற்றுத் திகைத்தார். அந்தோ! என்ன மாறுதல்! என்ன புரட்சி!

மாஸ்கோவுக்கும், பெட்ரோகிராடுக்கும் இடையே, நடுநிசியில் ஜார் இருந்த புகைவண்டி எங்குபோவதெனத் தெரியாது திகைத்துக் கொண்டிருந்தது. ஜார் முகம் வெளுத்து காணப்பட்டது. அவர் இருந்த வண்டிக்கருகில் போக ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை. காலை நான்கு மணி சுமாருக்கு 'ஸ்டாராய் ரூஸா' (Staraia Roussa) என்னும் ஸ்டேஷனுக்கு வண்டி வந்தது. அங்கிருந்து யாருக்கும் தெரியாமல் சமீபத்திலிருந்த ஒரு ஊருக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அவ்வூருக்குப், புதிதாக அமைக்கப்பட்ட ஜனநாயக அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இருவர் வந்து ஜாரைக்கண்டு பேசினர். அங்கிருந்துதான் ஜார் பட்டத்தைத் துறந்துவிட்டசெய்தி ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ராஜகுடும்பம் 'ஸார்ஸ்கோயி' (Tsarskoye) என்னுமிடத்தில் வைக்கப்பட்டது.

குழப்பத்தின்போது சுமார் 1500 பேர் இறந்துபோயிருந்தனர். சுமார் 6000 பேர் காயப்பட்டிருந்தனர். இறந்தவர்களை, எல்லாருமாகக்கூடி அடக்கஞ்செய்தனர். மாணவர்கள், பொதுஜனங்கள், தொழிலாளர், போர்வீரர் அனைவரும் அணிவகுத்து ஒழுங்காய், மௌனமாய்ச்சென்று இறந்தவர்களுக்கு மரியாதை செய்தனர். ஊர்முழுதும் திரண்டு புரட்சியில் மாண்டவர்கள் சமாதிகளுக்குச்சென்று வந்தது. காலையிலிருந்து மாலைவரை போவோரும் வருவோருமாகவே இருந்தனர்.

## ஜனநாயக அரசாங்கம்.

இளவரசரையாவது, ஜார் தம்பியையாவது அரசராக்கி புதிய அரசாங்கம் அமைப்பதா? அல்லது ஜனநாயக அரசாட்சி ஏற்படுத்துவதா வென்பதைப்பற்றி பலத்த அபிப்பிராய பேதம்இருந்து வந்தது. டூமாசபையில் இதைப்பற்றி பலத்த விவாதம் நடைபெற்றபின் முடியாட்சி உதவாதென்றும், குடியாட்சியே நிறுவவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

மிதவாதக்கட்சியாரும், தொழிலாளர் கட்சியாருங் கூடி ஆலோசித்துப் புதிய அரசாங்கமொன்றை அமைத்தார்கள். அவ்வரசாங்கத்துக்கு இளவரசர் 'லோவ்' (Lvov) தலைவரானார். மாபெரும் ஜார் ஆட்சி வீழ்ந்து, ஜனங்கள் ஆட்சி ஏற்பட்டுவிட்டதென்பதை மக்கள் நம்பமுடியவில்லை. திடீரென ஏற்பட்ட மாறுதலைக்கண்டு எல்லாரும் திகைத்தனர்.

## தொழிலாளர் கூட்டம்.

பிற்பாடு தொழிலாளர், போர்வீரர் அடங்கிய பிரமாண்டமான கூட்டமொன்று டூமா சபையில் கூடிற்று. சில தினங்களுக்கு முன் அவர்கள் அங்கே நுழையவும் அனுமதி கிடையாது. பெரிய பெரிய பணக்காரர்களாகக் கூடி ஆலோசிக்கும் கெம்பீரமான அந்த மண்டபத்தில் பரம ஏழைகளும் உயரிய மெத்தைகளில் உட்கார்ந்திருந்தனர். அது ஒரு குறிப்பிடத்தக்க காட்சியாயிருந்தது. எந்த தேச சரித்திரத்திலும் இவ்வித சம்பவம் நேர்ந்த

தில்லை எனலாம். அங்கு கூடியிருந்த தொழிலாளரும், போர்வீரரும் மட்டிலா மகிழ்ச்சியால் தலை கால் தெரியாமல் பேசத்தொடங்கினர். ஒருவர் பேசி முடிப்பதற்குள் 'நான் பேசவேண்டும், நீ பேசவேண்டும்' என்று எழுந்தனர். கூட்டம் அமைதியாக நடைபெறுவது சிறிது சிரமமாகவே யிருந்தது. அச்சபையிலிருந்த பெரிய அழகிய ஜார் உருவப் படம் எடுத்து வீசி எறியப்பட்டது.

அச்சமயத்தில் ஒரு பெரிய கனவான் (Count Davidof) அங்கு சில புரட்சிக்காரரால் கொண்டுவரப் பட்டார். அவர்நிலை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. அவரை நோக்கி அனைவரும் கூச்சலிட்டனர். அவர் வேலைக்காரனு யிருந்த ஒருவன், அவர் அருகில் சென்று "இதோ பாருங் கள்! இவனிடத்தில் 2000 ஏக்கர் நிலம் இருக்கிறது. 5 அரண்மனைகள் பாரிஸ் நகரத்தில் இருக்கின்றன. பல ஊர் களிலுமாக 20 காதலிகள் இருக்கின்றனர். எனக்கு ஒருத்தி கூட கிடையாது" என்று ஆத்திரத்தோடு மொழிந்தான்.

இரண்டு தினங்களாக, மாவும், இதர உணவுப் பொருள்களும் இலவசமாகவும், விலை சரசமாகவும் எல்லா ருக்கும் கிடைத்ததால், சிறுவர் முதல் பெரியவர்வரை "புரட்சி வாழ்க!' 'புரட்சிக்காரர்கள் நீடூழி வாழ்க!" என்று கோஷித்துக் கொண்டு சென்றனர். சில தினங்களுக்கு முன் வீதிகளில் வருவது ஆபத்து விளைவிக்கத்தக்கதாய் இருந்தது. இன்றோ வீட்டில் ஒருவரும் இல்லாமல் எல் லாரும் வீதிகளிலேயே காணப்பட்டனர்.

போர் வீரர், புதிய தலைவர்களுக்குக் கீழ் சிவப்புக் கொடிகளை ஏந்திய வணக்கம் ஒழுங்காய் அணிவகுத்துச் சென்றனர்.

தொழிலாளர் அனைவரும் தங்கள் தங்கள் தொழிற் சாலைகளுக்குப்போய் வேலைசெய்ய ஆரம்பித்தனர். தொழிலாளரின் வேலை நேரம் 8-மணியாகக் குறைக்கப்பட்டது. இதனால் அல்லும் பகலும் ஓய்வு ஒளிவின்றி வியர்வை சொட்ட உழைத்துக்கொண்டிருந்த தொழிலாளருக்கு சுகம் அனுபவிக்க ஓய்வு கிடைத்தது.

சில தினங்களுக்குப்பின், ஜார் அரசாங்கத்தால் அடக்கப்பட்டு வெளி வர முடியாது தவித்துக் கொண்டிருந்த பத்திரிகைகள், புற்றீசல்களைப்போல் 'மள மள' வென ஆனந்தத்தோடு வெளியேறின. அவைகளில் கொட்டை யெழுத்தில் "குடியரசு வாழ்க" "வேண்டியது நிலமும், சுதந்திரமும்" என்பனபோன்ற தலைப்புகள் காணப்பட்டன

பெட்ரோகிராடில் குழப்பம் நடந்து கொண்டிருந்த போது கிராமவாசிகளும் ஆவேசங்கொண்டு, தங்கள் எஜமானர்களின் கொடுமையைச் சகிக்கமாட்டாமல் பல விடங்களில் பண்ணைகளைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள்; பல விடங்களில் தானியம் சூறையாடினார்கள். புரட்சியையும், தனால் ஏற்பட்ட புதிய குடியாட்சியையும் அறிந்து ஏழை விவசாயிகள் குதிக்கத் தொடங்கினார்கள்.

ரயிலிலும், பொதுவிடங்களிலும், காரியாலயங்களிலும், ஏழைகளும், உத்தியோகஸ்தர்களும் சரி சமத்துவத்

தோடும், அன்போடும் நடந்துகொண்டனர். புரட்சிக்குமுன் அத்தகைய காட்சியைக்காண முடியாது. உத்தியோகஸ்தரோ அல்லது தனவந்தரோ தூரத்தில் வரும்போதே எல்லாரும் ஒதுங்கிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அதன் விளைவு கடுமையாயிருக்கும். அதிகாரிகள் செய்கைக்கு அப்பீலே கிடையாது. அவர்கள் சொன்னதுதான் சட்டம், இட்டதுதான் கட்டளை.

ரயில்வே ஸ்டேஷன்களிலும், ஹோட்டல்களிலும், சர்வ சாதாரண சிப்பாயும், முதலாளிகளோடு சமத்துவமாக உட்கார்ந்து போவதோ, சாப்பிடுவதோ சகஜமாகிவிட்டது. சிப்பாய்களும், தொழிலாளரும், முதலாளிகளோடு ரயிலில் முதல் வகுப்பில் பிரயாணஞ்செய்ய ஆரம்பித்தனர்.

## யுத்தப்பிரச்னை.

இப்படியாகச் சில தினங்கள் சென்றபின், பெரும் பிரச்னையொன்று தோன்றியது. ஜெர்மனியால் தொடுக்கப்பட்ட உலகமகா யுத்தம் நடந்துகொண்டிருந்தது. புரட்சிக்குப் பின்னும் ரஷிய யுத்தவீரர் நேச தேசத்தாரோடு சேர்ந்து ஜெர்மனிக்கு விரோதமாய்ப் போர்புரிந்து கொண்டிருந்தனர். குடியாட்சி ஏற்பட்ட பின், தொடர்ந்து அந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ரஷிய சைனியத்தை சண்டை செய்யும்படிச் சொல்லி மேலும் உதவிக்காக சைனியத்தை அனுப்புவதா அல்லது ஜார் அரசாங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தை நிறுத்திக்கொள்வதா என்று பலமாக அரசியல் வாதிகளிடையே விவாதிக்கப்பட்டு

வந்தது. சமதர்மப்பத்திரிகைகள் "யுத்தம் ஒழிக! அதனுல் ஏழைகளுக்குத்தான் நஷ்டம்" என்று முழங்கின.

"புரட்சி வெற்றி பெற்றுவிடவில்லே. நமக்குள் இருக்கும் முடியாட்சி மோகங் கொண்ட ஜார் அபிமானிகளேயும், முதலாளித்தன்மையையும் ஒழிக்கவேண்டும். இந்த உள் நாட்டு எதிரிகளோடுதான் முதலில் போராட வேண்டும். வெளிநாட்டு (ஜெர்மன்) எதிரிகளோடு இனி போராட்டம் வேண்டாம்" என்று பொதுஜனத் தலேவர்கள் கர்ஜித்தார்கள்.

தொழிலாளிகளும் யுத்தத்தை வெறுத்தார்கள். யுத்தத்தில் ஏழை எளியவர்களான மக்களே போர்வீரராகச் சென்று போர் முனேயில் முன்னணியில் நின்று முதலாளிகளுக்காகவும், திமிர்பிடித்த அரசர்களுக்காகவும், தங்கள் உயிரைப் பலி கொடுக்க நேரிடுகிறதென்றும், சுயநலத்துக்காகப் போராடும் அரசருக்காகவும், முதலாளிகளுக்காகவும், எளியவர் ரத்தத்தை ஏன் சிந்தவேண்டும்? என்றும் போர் வீரர், தொழிலாளர் அடங்கிய சங்கம் கேட்டது.

## புதிய அரசாங்கத்தில் அதிருப்தி.

புதிய ஜனநாயக அரசாங்கத்தில் பதவி வகுத்திருப்பார் முதலாளித்தன்மையுடையவர்களாதலாலும், ஜார் தொடுத்த யுத்தம் தொடர்ந்து நடத்தப்படவேண்டுமென்னும் அபிப்பிராயமுடையவர்களாதலாலும், அரசாங்கம் இப்பிரச்னேயில் மௌனம் சாதிக்கத் தொடங்கியது. யுத்தகளத்திலிருந்த சிப்பாய்கள் தேசத்திற்கு அழைக்கப்பட

வில்லை. ஆகவே, தொழிலாளர் சங்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் அபிப்பிராய பேதம் உண்டாயிற்று.

ருஷியப்பெண்கள், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்ப வாக்குரிமை கேட்டார்கள். புதிய சர்க்கார் அப்படியே கொடுத்தார்கள். ஆனால் அதை அநுஷ்டானத்தில் கொண்டுவருவதற்குப் பிரயாசை எடுத்துக்கொள்ளவில்லை. ஜாதி, மத, இனபேதமின்றி எல்லாரும் சமத்துவமாய் நடத்தப்படவேண்டுமென்றும், எல்லா காரியாலயங்களிலும் எல்லாரும் போவதற்கு உரிமை வேண்டுமென்றும் ஜனங்கள் கோரினார்கள். அவையும் கொடுக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் கொண்டுவர காலங்கடத்தினார்கள். ரொட்டி சப்ளையும் சரிவர செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு புதிய அரசாங்கம் செய்யாததால், பொதுஜனங்கள் ரொட்டிக்கிடங்குகளில் வெகுநேரம் காத்திருந்து வீடு திரும்பும்படி நேரிட்டது. இக்காரணங்களால் பொதுஜனங்களுக்குப் புதிய குடியாட்சியால் திருப்தி ஏற்படவில்லை.

தொழிலாளர் சங்கம், பொறுமையிழந்து யுத்தத்தை உடனே நிறுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டது. 'நமக்குப் பிறதேசத்தாருடைய நிலமும் தேவையில்லை; நமது நிலத்தைப் பிறதேசத்தாரும் கவரவேண்டாம்' என்று தெரிவிக்கும்படி சர்க்காரை நிர்ப்பந்தித்தது. நாளாக ஆக புதிய சர்க்காருக்கும், தொழிலாளர் சங்கத்துக்கும் மனக்கசப்பு அதிகரித்துக்கொண்டே போயிற்று. சட்டசபைக் கூட்டத்தில் சங்கப்பிரதிநிதிகளுக்கும் புதிய மந்திரிகளுக்கும் வாக்குவாதம் பலத்தது.

## லெனின் விஜயம்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது, ஜார் அரசாங்கத்தாரால் நாடு கடத்தப்பட்டு இதுகாறும் தலை மறைவாய் 'ஸ்விட்ஸர்லாந்தில்' வசித்துவந்த சமதர்மவீரர் லெனின் ருஷியாவுக்குள் வந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் காட்டுத்தீபோல் பரவியது. எங்கும் ஓர் புத்துணர்ச்சி உண்டாயிற்று. விமோசனம் சமீபித்துவிட்டதைப்போல் ஜனங்கள் கருதினார்கள். நீண்டகாலமாய்க் காணாதிருந்த தமது தலைவரைக்காண அத்தனைபேரும் திரண்டு, இடித்துத்தள்ளிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடினார்கள். வண்டி ஸ்டேஷனுக்கு வருவதற்குமுன்பே வழியில் நிறுத்தும்படியாயிற்று. எங்கும் ஒரே ஜனத்திரள். ஆண், பெண், சிறுவர், கிழவர் எல்லாரும் லெனினைக்காண ஆவலுடன் காத்திருந்தார்கள். வண்டியிலிருந்து தொப்பியை ஆட்டிக்கொண்டே, புன்சிரிப்புடன், வைராக்கியமும், வீரமும் நிறைந்த பார்வையுடன் கூடிய ஓர் குட்டை உருவம் இறங்கியது. உடனே 'லெனின் நீடூழி வாழ்க'! 'புரட்சி வாழ்க'! எனும் தொனி வானத்தைப் பொத்துக்கொண்டு போகும்படி கிளம்பியது. எல்லாருடைய தொப்பிகளும், கைக்குட்டைகளும் மேலேபறந்தன. ஆனந்தத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. லெனின் தம்முடைய இருப்பிடம் போய்ச்சேரும்வரை "லெனின் வாழ்க" எனும் கோஷம் காதைச் செவிடுபடச்செய்தது. தெருக்களிலும், மச்சுகளிலும், விளக்குத்தூண்களிலும் திரளான ஜனங்கள் நின்று ஆரவாரித்து அவரை வரவேற்றனர். அது, கண்கொள்ளாக் காக்ஷியாயிருந்தது. அவர் வந்திறங்கியது 'பின்லந்து' ஸ்டேஷனில் (Finland Station.)

மறுநாள் மாலையிலேயே சட்டசபையின் விசேஷக் கூட்டம் கூடியது. லெனின் பேசப்போவதாகத் தெரிந்து மண்டபம் கொள்ளாதபடி ஜனங்கள் வந்து நிரம்பினர். தம்முடைய வீரத்தொனியில், புதிய அரசாங்கத்தைப் பற்றியும், யுத்தத்தைப் பற்றியும் லெனின் உபந்நியாசம் செய்தார். அவர் சொன்னதாவது:—

"புதிதாக நிறுவப்பட்டுள்ள அரசாங்கம் கவைக் குதவாது. ஒரு காரியமும் அது செய்ய சக்தியற்றதாய் இருக்கிறது. ஏழைகளுக்கு அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஏழைகளின் பேரால் பணக்காரர் ஆட்சிதான் நடைபெறும். யுத்தம் எப்படியாவது உடனே நிறுத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு சமதர்ம ஆக்ஷி ஏற்படுத்தப்படவேண்டும். பணக்காரர், ஏழை என்ற வித்தியாசம் இல்லாது செய்யப்படவேண்டும். அதுவரை ஏழைகளுக்கு விமோசனம் இல்லை."

## "மே"—தின விழா.

இதுவரை ருஷிய தேசத்துத் தேதிக்கும் இதர தேசங்களின் தேதிக்கும் வித்தியாசம் இருந்தது. ருஷியாவின் ஏப்ரல்மீ 18உ, இதர தேசங்களில் மேமீ 1உயாயிருக்கு[ம்]. வித்தியாசமான காலெண்டரை உபயோகித்து வந்த[தே] காரணமாகும். ஆகையால் புதிய அரசாங்கம் அதை மாற்றி இதரதேசங்களின் காலண்டரை அனுசரிக்கத் தொடங்கியது. அதன்படி ஏப்ரல்மீ 18உ, மேமாதம் 1உயாயிற்று. மே மாதம் முதல் தேதி தொழிலாளர்

தினமாக இதர எல்லா தேசங்களிலும் கொண்டாடப்பட்டு வருவதைப்போல் முதன் முதலாக அன்று ருஷியாவிலும் கொண்டாடப்பட்டது. எல்லாரும் அதில் கலந்து கொண்டனர். "கேம்ப்—டி—மார்ஸ்" எனுமிடத்தில் திரளான ஜனங்கள்வந்து குழுமினர். வழிநெடுக, சிப்பாய்களும், மாணவர்களும், தொழிலாளரும், அணிவகுத்து வந்தனர். போலீஸ் உதவி சிறிதுமின்றி ஜனத்திரள் ஒழுங்காக விலகி பாதைவிட்டது குறிப்பிடத்தக்கது. பாதையின் இருபுறமும் வெகு நேரம்வரை ஜனங்கள், தொழிலாளர் ஊர்வலம் போவதைப்பார்த்துக்கொண்டு ஒழுங்காய் நின்றிருந்தார்கள்.

குறிப்பிட்ட இடத்திற்கு எல்லாரும் போய்ச்சேர்ந்த பின், மாணவர்களும், தொழிலாளரும், சிப்பாய்களும், பிரசங்கங்கள் செய்தார்கள். ஒவ்வொருமூலையிலும் பிரசங்கமே நடந்து கொண்டிருந்தது. புரட்சியைப் பற்றியும், புதிய அரசாங்கத்தைப்பற்றியும், லெனின் கக்ஷியைப்பற்றியுமே பேச்சாயிருந்தது. லெனின் கோஷ்டியார் ஒரு புறம் தங்கள் பிரசாரத்தைச் செய்துகொண்டிருந்தார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கும் ஒரு சில அதிகாரிகளும் ஒருபுறம் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். ஜனங்கள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

போலீஸ் உதவி அதிகமின்றி அவ்வளவு பெரிய கொண்டாட்டம் ஒழுங்காக நடைபெற்று முடிவடைந்தது.

## முறிவு.

இரண்டு நாட்களுக்குப்பின், மேமீ 3வ, சர்க்கார் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதில் "யுத்தம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்றும், நிறுத்தப்பட்டால் நாட்டுக்கு அவமானம் நேருமென்றும்" கண்டிருந்தது. லெனின் "முறிவு" என்னும் தலைப்பில், சர்க்காருக்கும், தொழிலாளர் சங்கத்துக்கும் இனி சமாதானம் ஏற்பட முடியாதென்று கடுமையான வியாசம் ஒன்று தமது "பிராவ்டா" பத்திரிகையில் எழுதினர்.

தொழிலாளர் சங்கம், சர்க்கார் அறிக்கையைப்பற்றி ஆலோசிக்க விசேஷ அவசரக்கூட்டமொன்று கூட்டியது. இரவு முழுதும் கண் விழித்துக்கொண்டு மிக்க பரபரப்போடு அதன் நிர்வாக அங்கத்தினர்கூடி ஆலோசித்தனர். ருஷிய சர்க்கார், ஜர்மனிக்கு விரோதமாய் நேச தேசத்தாரோடு செய்துள்ள யுத்த ஒப்பந்தத்தைக் காண்பிக்கும்படி லெனின் கோரினர். "புதிய குடியாட்சி சர்க்கார், மீண்டும் முடியாட்சியை ஸ்தாபிக்க முயற்சிக்கின்றனர். முதலாளித் தன்மைகொண்ட உதிரம் அவர்கள் நரம்புகளில் ஓடுகிறது. இனிமேல் இந்த சர்க்காரை நடக்கவிடாது தடுக்க வேண்டும். அதிகாரத்தை நாங்கள் கைப்பற்றவேண்டும்" என்றும் சொன்னர்.

## கெரன்ஸ்கியின் துரோகம்.

சர்க்காருக்கும், தொழிலாளர் சங்கத்துக்கும் சமரசம் உண்டாக்கும் நோக்கத்தோடு,சிலரால் ஒரு கூட்டம் கூட்டப்

பட்டது. காலை நான்கு மணி வரை இரவு முழுதும் கூடி ஆலோசிக்கப்பட்டது. கடுமையான பதங்கள் பிரயோகிக்கப் பட்டன. கடைசியில் தொழிலாளர் தலைவரும், மந்திரிகளில் ஒருவருமான 'கெரன்ஸ்கி' (Kerensky) என்பவரால் யுத்தத்தைப்பற்றிய சர்க்கார் அறிக்கை நியாயமானதே என ஒப்புக்கொள்ளப்பட்டது.

இச்செய்தி லெனினுக்கு எட்டியதும் 'கெரன்ஸ்கி' மீது அவருக்குப்பலத்த சந்தேகம் உண்டாயிற்று. கெரன்ஸ்கி சுயநலக்காரர்; வேஷதாரி. அவர் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று சொன்னார். கெரன்ஸ்கி தொழிலாளர் தலைவராயிருந்தாலும் முதலாளிகளுக்கும், ஜார் அரசாங்கத்துக்கும் பாதகம் ஒன்றும் செய்யாமலேஇருந்து வந்தார். ஆகையால் லெனினுடைய பொறுப்பு அதிகப் பட்டது.

இப்படியிருக்கும்போது மேமீ 4வ திடுமென மைக் கேல் சதுக்கம் (Michael square) என்னுமிடத்தில் குண்டு மாரிபொழிந்தது. சர்க்கார் அதிகாரிகள் அங் கிருந்தனர். அலங்கோலமாய் எல்லாரும் ஓடத்தலைப் பட்டனர். "லெனின் கோஷ்டியார் வந்து விட்டார்கள்; துப்பாக்கி யுடனிருக்கிறார்கள்; ஓடுங்கள்! ஓடுங்கள்!!" என அதிகாரிகள் கூவினார்கள். கூட்டம் கலைந்தது. வேறு விசேஷம் ஒன்றும் நிகழவில்லை. சுட்டது யார்? பிற்பாடு எங்கே போனார்கள்? அவர்கள் நோக்கமென்ன? ஒருவருக் கும் தெரியாது.

## யுத்த முஸ்தீப்பு.

மேமாத இறுதிவரை ஒரு விசேஷமும் நிகழவில்லை. யுத்தத்திற்காகப் போர்வீரர்களைத் தயார்செய்வதிலேயே அரசாங்கத்தார் கண்ணுங்கருத்துமாயிருந்தார்கள். மேமாத இறுதியில் எல்லா சைனியங்களையும் போர்முனைக்கு அழைத்துச் செல்ல ஆயத்தம் செய்யப்பட்டது.

யுத்தத்திற்குப்புறப்படும் நாளன்று, 7வது படையின் தலைவரிடமிருந்து மந்திரி கொன்ஸ்கிக்கு ஒருதந்தி வந்தது. எல்லாப்படையும் புறப்பட்டுப் போயிருக்கும் என்னும் எண்ணத்தோடு அவர் ஆனந்தம்பொங்க அதைப் பிரித்துப் படித்தார். லெனின் கோஷ்டியார் எவ்வளவு எதிர்த்தாலு மென்ன? நாம் வெற்றியடையவே போகிறோம் என்று அவர் கனவுகண்டார். ஆனால் அந்தோ! அந்தத்தந்தியில் "48-வது படை புறப்பட்டுச் சென்றுவிட்டது; 45, 46 இவ்விரண்டு படைகளிலிருந்து பாதிப்பேர்தான் போகிறார்கள்; 47-வது போகமறுக்கிறது; 50-வது புறப்படப் போகிறது, 51-வது நாளைபுறப்படுவதாகக் கூறுகிறது. 49-வது உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறது; 52-வது அளவுக்கு மீறி குழப்பஞ்செய்து அதிகாரிகளைக் கைது செய்து விட்டது" என்று கண்டிருந்தது. கொன்ஸ்கியின் முகத்தில் ஈயாடவில்லை.

எல்லாப்படைகளிலும் இதே நிலைமையே ஏற்பட்டிருந்தது. 45, 46, 47, 52 ஆகிய படைகளை உடனே கலைத்து விடும்படியும், போர் வீரர்களிடையே விஷமப் பிரசாரம்

செய்து இவ்வாறு செய்யும்படித் தூண்டும் பேர்வழிகளைக் கடுமையாகத் தண்டிக்கும்படியும் உடனே சர்க்கார் உத்திரவு ஒன்று வெளியாயிற்று.

ஆனால் அது சர்க்கார் எண்ணத்தைச் சாதிக்க 'இம்மி' யும் உதவவில்லை. ஒரு யுத்தவீரனும் அதைப் பொருட் படுத்தவில்லை. எங்கும் அதிருப்தியே அதிகரித்தது. யுத்தத் திற்குப் புறப்படும்போது வேண்டிய உற்சாகம் ஒருவரிட மும் காணப்படவில்லை.

சில நாட்களுக்குப்பின் 61-வது படை அதிகாரியிட மிருந்து ஒரு அவசரக்கடிதம் வந்தது. அதில் "லெனின் கோஷ்டியைச் சேர்ந்த சேனையொன்று இங்கு வந்திருக் கிறது. எங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடிப்பதைத்தவிர வேறு வழியில்லை. பலர் ஓடி விட்டார்கள். அச்சேனையின் வரவைக் கண்டதும் உத்தி யோகஸ்தர் முதல் எல்லாரும் நடுநடுங்கி ஓடுவதைத்தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. 61-வது படையின் அதிகாரி, தன் கீழுள்ள வீரர்களைப் பயமுறுத்தி ஓட விடாது ஒன்றுசேர்க்க வீணே பிரயத்தனப்பட்டார். சிப்பாய்களில் சிலர் 'ஜார் அரசாங்கத்தை நாங்களே ஒழித்தோம். அதைப்போலவே எங்களுக்குப் பிரியமில்லா விட்டால் "கெரன்ஸ்கி"யையும் உதைத்துத் தள்ளுவோம், நீங்கள் யார் கேட்பதற்கு?" என்று கூறிப்படையை விட்டுக்கலைந்து போய் விட்டார்கள்" என்று எழுதியிருந் தது.

சேனை வீரர்கள் குழப்பஞ்செய்து பின் வாங்குவது கண்டு சர்க்கார் மனம் தளர்ந்தது. கெரன்ஸ்கி ஜனங்களி டையே பிரசாரம் செய்யத் தொடங்கினர்,

யுத்தத்திற்குப் படையனுப்ப வாக்களித்த ருஷிய சர்க்கார், ஒப்பந்தப்படி அனுப்பத் தவறுவதைக் கண்டு நேச தேசத்தார் கோபமடைந்தனர். என்ன செய்வார் கெரன்ஸ்கி? ஜனங்களிடையே கதறினர்; சிப்பாய்களி டையே கெஞ்சினர்; ஒன்றும் நடக்கவில்லை. நாளுக்கு நாள் நேச தேசத்தார், ருஷியப்படையை அனுப்பும்படி நிர்ப்பந் தித்தனர்.

கடைசியாக ஒரு சில பேர் கொண்ட ருஷியப்படை யுத்தகளத்திற்குச் சென்றது. ஜெர்மானியர் பலங் குன்றியிருப்பதாகவும், எளிதில் ஜெயித்துவிடலாமென்றும் அந்தப் படைக்குத் தைரியமூட்டப்பட்டது. போரும் ஆரம்பமாயிற்று. ஆனல் அந்தோ! எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாக ஜர்மானியர் கடுமையாகக் கோபவேசத் தோடு தாக்கினர். ருஷியர் ஓடத்தலைப்பட்டனர். ஓடுபவர் களைச் சுடும்படி அதிகாரி உத்திரவிட்டார். ஆனல் பயன் ஒன்றும் விளையவில்லை. அதிகாரிகளை மீறி சிப்பாய்கள் நடக்கத்தொடங்கினர். அவர்கள் அதிகாரம் செல்லவில்லை.

## விவசாயிகள் குழப்பம்.

நாடு போய்க்கொண்டிருக்கும் போக்கைக்கண்டு ருஷிய முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும் நடுநடுங்கினர். தங்களுக்குப் பெரிய ஆபத்து வரப்போவதாக உணர்ந்து

சொத்தையும், நிலத்தையும், பெண்டு பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக ஏற்பாடுசெய்ய ஆரம்பித்தனர்.

அதிக நிலம் வைத்திருந்தவர்கள், சொத்தை எங்கு புரட்சிக்காரர்கள் அபகரித்துக்கொள்ளுவார்களோ வென்று பயந்து விற்கத்தொடங்கினர். ஒருவருக்குப்பின் ஒருவராய் நிலத்தையும், இதர சொத்துக்களையும் விற்றதாலும், விதை விதைத்தால் எங்கே புரட்சிக்காரர்கள் வந்து அறுவடை செய்துகொண்டு போய்விடுவார்களோ வென்று அஞ்சி விதைக்காமல் இருந்து விட்டதாலும், அபரிமிதமான உழவர்களுக்கு வேலையில்லாது போயிற்று. உணவுப் பொருள்களுக்குப் பஞ்சம் உண்டாயிற்று.

வேலை இல்லாமலும், சாப்பாட்டிற்கு உணவுப் பொருள்கள் இல்லாமலும்போகவே எல்லா ஏழை விவசாயிகளும் அதிருப்திகொண்டு குழப்பஞ் செய்யத் தலைப் பட்டனர். எங்கும் கூக்குரல்; எங்கும் முறையீடு. "முதலாளிகள் எங்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டனர்; எங்கள் வயிற்றுக்கு உணவில்லை; பெண்டு பிள்ளைகள் கண்களைக் கசக்குகிறார்கள்; நாங்கள் பல நாட்களாய் பட்டினி கிடக்கிறோம்; சர்க்கார் கவனிக்க வேண்டும்." என்று எல்லா விவசாயிகளும்கூடி அரசாங்கத்தாரிடம் முறையிட்டார்கள்.

அரசாங்கம், திடுமென கிளம்பியிருக்கும் இந்த விவசாயிகளின் அமைதியின்மையைக் கண்டு சமாளிக்க

முடியாமல் திகைத்தது. அமைதியாய், அப்பாவிகளாய், ஒன்று மறியாதவர்களாய், உதையும், மிதியும்பட்டாலும் 'இம்' மென்றுகூட சொல்லாதவர்களாய் வாழ்ந்துவந்த விவசாயிகளையும், யுத்தவீரர்களையும் தைரியமூட்டி கிளப்பிவிடுவது யார்?

விவசாயிகளுடைய பிரதிநிதிகள், கண்களில் நீர் ததும்ப அரசாங்கத்தாரிடம் தங்கள் குறைகளை நிவர்த்திக்கும்படி மன்றாடியதும், விசாரித்து ஆவன செய்வதற்கென்று கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டது. கிராமங் கிராமமாய்ச்சென்று குறைகளை அது விசாரிக்கத் தொடங்கியது. ஜனங்களுக்கு வேண்டியது ரொட்டியேயொழிய விசாரணையல்ல. ஆகையால் அதிருப்தி தணியவில்லை.

திடீரென்று ஒருநாள் ஒரு பட்டினி கோஷ்டி, ருஷிய தலைநகரத்தில் புகுந்துவிட்டதாக எங்கும் செய்தி எட்டியது. 'தாம்போ' மாகாணத்தில் ஒரு கோஷ்டி ஒரு நிலச்சுவான்தார் நிலத்தை துவம்சம் செய்தது. ராணுவ வீரர்கள் துப்பாக்கிகளுடன் விவசாயிகளுக்கு உதவி செய்வதாக தெரியவந்தது. விவசாயிகளும் ஆயுதம் வைத்திருப்பதாக சர்க்காருக்குச் செய்தி எட்டியது. ஆகையால் 'கார்கோ' மாகாணத்து நிலக்கமிட்டி எல்லா வீடுகளிலும் புகுந்து ஆயுதம் இருக்கிறதாவென சோதனையிடத் தீர்மானித்தது. ஒரு பெரிய உள்நாட்டுக் குழப்பம் உண்டாகப்போவதாக எல்லாரும் உணர்ந்தார்கள்.

ஜாரைக்கவிழ்த்திய புரட்சியில் மாணவர்கள் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டதை யாவரும் அறிவார்கள்.

இந்த மறு புரட்சியில் அவர்கள் ஜனநாயக சர்க்காருக்குச் சாதகமாக இனி குழப்பம் கூடாதெனவும், சமாதானம் நிலவ பாடுபடவேண்டுமெனவும் ஜனங்களிடையே பிரசங்கித்தனர். ஆனால் அவர்கள் முயற்சி வீணாயிற்று. நாளுக்கு நாள் புதிய குடியாட்சிக்கு விரோதமான அபிப்பிராயம் வலுத்துவந்தது. தொழிலாளரும், விவசாயிகளும் சுகம்பெற விரும்பினார்கள். "பட்டதெல்லாம் போதும்; இனி படமுடியாது" என்று கூக்குரலிட்டார்கள்.

நகர உத்தியோகஸ்தர்களும், புரட்சிக்காரர்களுக்குச் சாதகமான காரியங்கள் செய்ய முற்பட்டார்கள். கிராம அதிகாரிகள், நிலச்சுவான்தார்களையும், முதலாளிகளையும் கைதுசெய்து, அவர்கள் சொத்தை அபகரித்துக்கொண்டு ஊரைவிட்டுப் பெண்டு பிள்ளைகளோடு விரட்டி அடிப்பதாக சர்க்காருக்குச் செய்தி எட்டியது. அதை அறிந்துவரும்படியும், வேண்டுவன செய்யும்படியும் சில பிரதிநிதிகளை அரசாங்கத்தார் அனுப்பினார்கள்.

தனிப்பட்ட நிலச்சுவான்தார்களுக்கு விரோதமாக விவசாயிகள் மென்மேலும் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தார்கள். சொத்துடையவர், வீட்டுக்குவெளியே தலைகாட்டுவது ஆபத்து விளைவிக்கத்தக்கதாய் இருந்தது. உயிருக்கு அஞ்சி அனைவரும் பெட்டியிலடங்கிய பாம்புகளைப்போல் கிடந்தார்கள். விவசாயிகள் புரட்சி, உச்சஸ்தானத்தை அடைந்தது. மாஸ்கோவுக்கு வெளியேயிருந்த காஷிர்கவுண்டி என்னும் பாகத்தில் போல்ஷ்விக் கட்சியார் கிறிஸ்தவக்கோயில்களையும், மடங்களையும், நிலங்களையும் தங்கள் வசப்படுத்தும்படி பொது ஜனங்களைத் தூண்டினார்கள்.

## சட்டமறுப்பு.

எங்கும் சட்டமறுப்பு தோன்றியது. 'தனிவுடைமையை விட்டொழியுங்கள். நிலத்தையும், சொத்தையும் பொது வுடைமையாக்குங்கள். பலர் பட்டினிகிடக்க, சிலர் தின்று கொழுப்பதா?' என்று விவசாயிகள் சொன்னார்கள். அதை ஒருவரும் பொருட்படுத்தவில்லை.

முதலாளிகள் அனைவரும், தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும் உணவுக்குவேண்டிய ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக 'புரட்சியை அடக்குங்கள்! 'ஏழைகளைப் பணியச் செய்யுங்கள்! என்று அரசாங்கத்தாரை அதட்டினார்கள். கைத்தொழிற்சாலைகள் யாவையும் மூடி, தொழிலாளரை வேலையிலிருந்து துரத்தியடித்து சிக்ஷிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அப்படியே கதவடைப்பு நிகழ்ந்தது. இதைக்கண்ட தொழிலாளருக்கு ஆத்திரம் பொங்கியது. நிலைமை மிகவும் மோசமாகியது. பசிப்பிணி அதிகரித்தது.

காலை வேளையில் 'கர்ஸ்க்' (Kursk)என்னும் மாகாணத்தில் திடுமென விவசாயிகள் கூட்டமொன்று தோன்றி, நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த புத்தக் கைதிகளை நோக்கி 'தோழர்களே! இன்று உங்களுக்கு விடுதலை நாள்! முதலாளிகளை உதறித்தள்ளி விட்டு வாருங்கள்' என்று கூறி அவர்களை தன்னுடன் அழைத்துச்சென்றது.

'பென்ஸா' (Penza) மகாணத்தில், நிலச்சுவான்தார்களோடு உழவர்கள் செய்திருந்த ஒப்பந்தங்களை சுக்கு நூறுகக் கிழித்தெறிந்து, ஒருவரும் முதலாளிகள் நிலத்தில்

வேலை செய்யாதவாறு தடுத்தனர். 'இதோ நாங்கள் கஷ்டப்பட்டுப் பயிர்செய்த தானியம்!' என்று நிலத்திலிருந்த வித்துக்களை எல்லாம் சூறையாடிச் சென்றார்கள். சொத்துக்களைக் கவர்ந்தார்கள். காடுகளில் புகுந்து, அவைகளுக்குச் சொந்தமானவர்கள் மரம் வெட்ட வந்தபோது 'நில்லுங்கள்! வெட்டாதீர்கள்!. இவையெல்லாம் எங்கள் மரங்கள்! இது எங்கள் காடு! என்று கர்ஜித்தார்கள். நிலங்களை சர்வே செய்யாதபடி தடுத்தார்கள். பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சிப்பாய்களோடு முதலாளிகளின் வீடுகளில்புகுந்து, அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். சிறுகச்சிறுக பணக்காரர்களிடமிருந்த ஆயுதங்களெல்லாம் ஏழைகளிடம் சென்றன.

## மதகுருவின் கொலை.

'கார்கோவ்' (Kharkov) என்னும் மாகாணத்தில் ஒரு கிராமத்தில் மத விழா நடந்தது. செயிண்ட் நிக்கோலா (St. Nickola) என்னும் மதகுரு மிகவும் ஆடம்பரமாக வழக்கம்போல் ஊர்வலம் வந்துகொண்டிருந்தார். பக்தர்கள் மௌனமாய் அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்தார்கள். திடீரென கூட்டத்தில் அமளி ஏற்பட்டது. என்ன? என்ன? வென்று அனைவரும் கலவரமடைந்தார்கள். கையில் 'பளபள' வென மின்னும் அரிவாள் ஒன்றை ஏந்திய வண்ணம் கூட்டத்தில் ஒருவன் 'ராஸ்கல்! நீ ஊர்வலமா வருகிறாய்?' என்று கடிந்துகொண்டு ஓடிவருவதைக் கண்டார்கள்.

அடுத்த நிமிஷம் அலங்கார ஆடைதரித்து உட்கார்ந்திருந்த மதகுருவின் தலை பலகஜதூரம் உருண்டு போய் விழுந்தது. ஊர்வலம் குழப்பத்தில் முடிந்தது.

## அடக்குமுறை.

அரசாங்கத்தாரிடமிருந்து கலகக்காரர்களை அடக்கும்படி உத்திரவுகளுக்குமேல் உத்திரவுகள் வந்தன. சர்க்கார் சிப்பந்திகளே புரட்சிக்காரரோடு சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்துவிட்டபடியால் பெரிய அதிகாரிகளுக்கும், சிறிய அதிகாரிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டது. அரசாங்கத்தாரிடமிருந்த சேனையைக் காட்டிலும் பலமான சேனை புரட்சிக்காரரிடமிருந்தது. பணக்காரர்களைக் காப்பாற்ற அரசாங்கத்தாரால் முடியவில்லை. புரட்சிக்காரர் கை அனுதினமும் ஓங்கி வந்தது. ஒவ்வொரு குடியானவனிடமும் துப்பாக்கியிருந்தது. ஒவ்வொரு தொழிற்சாலைக்குப் பக்கத்திலேயே தொழிலாளர் கூப்பிடும்போது ஒத்தாசைசெய்ய யுத்தவீரர் காத்திருந்தார். அரசாங்க அறிக்கைகளைக் காட்டிலும் போல்ஷ்விக்கர் அறிக்கைகளே கிராமங்களில் அதிகமாக விநியோகிக்கப்பட்டன.

## கோவில் மானிபங்கள்.

சைபீரியா பிரதேசத்தில் கிருஸ்துவக் கோவில்களையும், மடங்களையும் விவசாயிகள் கைப்பற்றினர்கள். மதகுருக்கள் தத்தளித்தனர். போல்ஷ்விக் சிப்பாய்கள் பாதிரிகளையும், இதர மதகுருக்களையும் கைதுசெய்தனர். 'காலுகா மாகாணத்திலுள்ள கோவில் மானிபங்கள் ஏழைகளால் பறிமுதல் செய்யப்பட்டன. ஒரு நாள் ஒரு கன்னியாஸ்திரி மடத்தின் தலைவி அழுதுகொண்டு இருப்பதை ஜனங்கள் கண்டார்கள். ஏன் அழுகிறாய்? என்று கேட்டார்கள்,

'கன்னியாஸ்திரி மடத்தைச்சேர்ந்த சொத்தையும், நிலத்தையும் புரட்சிக்காரர்கள் கவர்ந்துகொண்டார்கள்; நான் இதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தேன்; அடுத்த நாள் எஞ்சியிருந்ததையும் புரட்சிக்காரர்கள் வந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். நான் அரசாங்கத்திற்கு அனுப்பிய விண்ணப்பம், அவர்களிடமே இருப்பதைக் கண்டேன்' என்று அழுதுகொண்டே சொன்னாள்.

நாட்கள் செல்லச்செல்ல சொத்தும், நிலமும், தொழிலாளரிடமும், விவசாயிகளிடமும் வரத்தொடங்கின. கர்ஸ்க் (Kursk) மாகாணத்தில், ஏழைகளிடம் சொத்தை ஒப்புவிக்க மறுத்த முதலாளிகள் கொலையுண்டு இறக்கத் தொடங்கினர்.

'எங்களிடமிருந்து அநியாயமாய் கவரப்பட்ட சொத்துக்களையும், நிலங்களையும் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்! இல்லாவிட்டால் சிரச்சேதம் செய்வோம்!' என்று விவசாயிகள் அனைவரும் சொன்னார்கள்.

ஒருநாள் 'அரசாங்கத்துக்கு வரி செலுத்தவேண்டாம்' என்று பிரசாரம் செய்துகொண்டிருந்த ஒரு யுத்தவீரன் திடீரென அரசாங்கத்தாரால்கைதுசெய்யப்பட்டான். அடுத்தநாள் அதே வீரன், அரசாங்க அதிகாரிகளையும், நிலச்சுவான்தார்களையும் கைது செய்துகொண்டிருந்தான். தம்முடைய வீரர்களில் ஒருவன் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டுவிட்டான் என்று தெரிந்ததும், புரட்சிக்காரர்கள் ஒன்றுகூடி குழப்பஞ்செய்து விடுவித்துவிடுவதுண்டு. அரசாங்கத்தாரின் அதிகாரம் செல்லவில்லை.

லெனின் கட்சியாருக்கு ஒத்தாசை செய்வதற்காக ஒவ்வொரு மூலை முடுக்கிலும் புதிய புதிய சங்கங்கள் தோன்றின. மார்ச் மாதத்தில் 34 பாகங்களில் பரவியிருந்த விவசாயிகளின் கிளர்ச்சியானது, ஏப்ரல் மாதத்தில் 174 பாகங்களிலும், மே மாதத்தில் 236 பாகங்களிலும், ஜூலையில் 325 பாகங்களிலுமாகப் பிரமிக்கும்படி பரவிற்று. காட்டுத் தீ போல் பரவிய இத்தகைய இயக்கம் உலக சரித்திரத்திலேயே வேறு கிடையாது.

## சோவியத் காங்கிரஸ்.

ஜனநாயக அரசாங்கம், இக் கிளர்ச்சியை அடக்கமுடியாமல் திகைத்தது. சீக்கிரம் சில சீர்திருத்தங்கள் வழங்கினல் குழப்பம் அடங்கிவிடுமென நினைத்து அவ்வேலையில் மும்முரமாக ஈடுபட்டது.

ஜூன் மீ 3உ ருஷிய சோவியத்துகளின் காங்கிரஸ் ஒன்று அரசாங்கத்தாரால் கூட்டப்பட்டது. (சோவியத் என்பது ருஷிய கிராம சபை) ஜனங்களுக்கு எத்தகைய சீர் திருத்தங்கள் வழங்கலாம் என்பதை ஆலோசிப்பதும், நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு வேண்டிய மார்க்கங்களைத் தேடுவதுமே அக்காங்கிரஸைக் கூட்டியதின் நோக்கமாகும். ஆனல் விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் அந்தக் காங்கிரஸில் நம்பிக்கை ஏற்படவேயில்லை.

அக் காங்கிரஸிற்கு மொத்தம் 777 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் 105 பேர் லெனின் கட்சியாராகிய **போல்ஷ்விக்கர்** ‡. போல்ஷ்விக்கர், சிறுபான்மையோரா

யிருந்தும் காங்கிரஸிலிருந்த பெரும்பான்மையோருக்கு அது சிறப்பாக நடைபெற்று முடிவடையுமென்ற நம்பிக்கையே இல்லை.

காங்கிரஸ் கூட்டம் ஆரம்பமாயிற்று. முதலில் எதை ஆலோசிப்பதென்று அதற்கு விளங்கவில்லை. உருப்படியான வேலை யொன்றும் செய்யாமல், அதன் பிரதிநிதிகள் பொது மக்களுடைய கண் துடைப்பதற்கென அனுவசியமான சர்ச்சையில் ஈடுபட்டனர். கடுமையான வாதத்துக்குப்பின், ஜார் காலத்தில் மந்திரியாயிருந்த ஒரு கனவானுடைய பெரிய பங்களாவை விவசாயிகளிடமிருந்து மீட்க வேண்டுமென்று தீர்மானித்தனர். அந்த பங்களாவைக் கொஞ்ச நாட்களுக்கு முன் தான் விவசாயிகள் தங்கள் வசப்படுத்தியிருந்தார்கள். காங்கிரஸ் செய்த தீர்மானம் விவசாயிகளுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அதன் பயனும் ஜூன் மீ 9௳ காங்கிரஸ் கூட்டத்தில் திடீரென ஒரு வெடி குண்டு வெடித்தது. பிரதிநிதிகள் கலவரமடைந்தார்கள்.

---

‡ 1905 ஹு ருஷியாவில் அபேதவாத காங்கிரஸ் ஒன்று கூடியது. அதில் மிதவாதிகளும், அதிதீவிர வாதிகளும் கலந்துகொண்டனர். மிதவாதிகள் தொகை குறைவாகவேயிருந்தது. அதிதீவிரவாதிகள் தொகை அதிகமாயிருந்தது ஆகையால் அன்று முதல் அதிதீவிரவாதிகள் 'போல்ஷ்விக்கர்' என்று அழைக்கப்பட்டனர். 'போல்ஷ்விக்கி' என்னும் ருஷியபதத்திற்கு பெரும்பான்மையோர் என்பது பொருள். சிறு பான்மையோரா யிருந்தவர்களை 'மேன்ஷ்விக்கர்' என்று அழைத்தார்கள். 'மேன்ஷ்விக்கி' என்னும் வார்த்தைக்கு சிறுபான்மையோர் என்பதே அர்த்தம்.

அதற்கு அடுத்த நாள், காங்கிரஸுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்வதற்கென பிரமாண்டமான ஊர்வலமொன்று நடத்தும்படி, பொது ஜனங்களுக்கு லெனினுடை 'பிராவ்டா' எனும் பத்திரிகை அறிக்கையொன்று வெளியிட்டது. இதைக் கேட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் நடுங்கினர். அந்த ஊர்வலம் காங்கிரஸின்பால் அதிருப்தியைக் காட்டும் ஊர்வலமாய் மட்டுமில்லாது, மிகவும் பயங்கரமான ஊர்வலமாய் நடக்கும் போல் தோன்றியது. ஆகையால் காங்கிரஸ், அத்தகைய ஊர்வலம் நடைபெறக் கூடாதென அதற்கு விரோதமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தைக் கேள்விப்பட்ட தொழிலாளரும், யுத்த வீரரும் தாங்களும் அவ்வூர்வலத்தில் கலந்து 'தற்கால ஆட்சி ஒழிக! பொதுவுடைமை ஆட்சி ஏற்படுக!' என்று முழங்கிக்கொண்டு செல்லலாமெனத்தீர்மானித்தனர்.

காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குப் பீதி அதிகரித்தது. தங்கள் உயிருக்கே எங்கு ஆபத்து வந்துவிடுமோ வென்று அஞ்சினர்கள். ஆகையால் 500பேர் ஒன்று கூடி தனித் தனி கோஷ்டிகளாகப் பிரிந்து, இரவு முழுதும் தூங்காமல் கைகளில் விளக்குகளை எடுத்துக் கொண்டு, விவசாயிகள், தொழிலாளிகள், சேனைவீரர்கள் ஆகியோருடைய இருப்பிடங்களுக்குச் சென்று ஊர் வலத்தில் கலந்து கொள்ள வேண்டாமென்று கெஞ்சினர்கள். ஆனல் அவர்கள் எண்ணம் சாயவில்லை. போன விடங்களில் உ... பெறுமல் வீடு திரும்பியதே பெரும்பாக்யமாய்ப்போயிற்று.

ஊர்வலத்தைத்தடுக்க முடியாமல் அரசாங்க அதிகாரிகள் விழித்தார்கள்.

## ஜமீன் ஊர்வலம்.

மறுநாள் பொழுது புலர்ந்தபோது எங்கும் அச்சமும் பீதியும் குடி கொண்டிருந்தன. 'மந்திரிகள் வீழ்க! எல்லா அதிகாரமும் ஏழைகள் வசம் வருக!' என்று முழங்கிக் கொண்டும், கொடிகளைப் பிடித்துக் கொண்டும் வீதியில் பிரமாண்டமான ஊர்வலம் தோன்றியது. மனிதப்பிரவாகம் அரசாங்கத்தை அடித்துக்கொண்டுபோக வருவதைப் போல் அக்கூட்டம் தென்பட்டது. சுமார் நான்கு லக்ஷம் பேர் அவ்வூர்வலத்தில் இருந்தார்கள். காங்கிரஸ் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் பார்த்துத்தலை குனிந்து கொண்டார்கள். பலர் வீடுகளுக்குள் ஒழிந்து கொண்டார்கள். இதைக் கண்டு ஊர்வலத்தில் கேலிச்சிரிப்பு அதிகரித்தது. ஊர்வலத்திலுள்ள அனைவரும் உற்சாகத்தோடு காணப்பட்டனர். போல்ஷ்விக் கொடிகள் எங்கும் பறந்து கொண்டிருந்தன. அவ்வூர்வலம், போல்ஷ்விக் கக்ஷியின் செல்வாக்கு உயர்வதையும், அரசாங்கத்தாரின் அதிகாரம் தாழ்வதையும் நன்கு நிரூபித்தது. அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ சர்க்கார் சிறிதும் தலையிடாததால் அவ்வூர்வலம் சாந்தமாக காங்கிரஸ் கூடியிருந்த கட்டடம் வரைச் சென்று கலைந்தது. சர்க்கார் தலையிட்டு கூட்டத்தைக் கலைத்தால், அப்போது தபாலாபீஸ், தந்தி ஆபீஸ், ஆயுதச்சாலை முதலியவைகளை வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், ஆயுதந்தாங்கிச் சென்று ரயில்வேக்களையும், பாங்குகளையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றும் போல்ஷ்விக் கக்ஷியார் தீர்மானித்திருந்தார்கள் லெனின் அரசாங்கத்தையே பிடித்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

## முடிவுரை.

ஜான் ஊர்வலத்தோடு இம் முதற்பாகம் முடிவடைகிறது.

இதுவரை வாசகர்கள், ருஷியப்புரட்சிக்குக் காரணமாயிருந்த சம்பவங்களையும், புரட்சியையும், ஜார் ஆட்சி வீழ்ந்து ஜன நாயக ஆட்சி ஏற்பட்டதையும், ஜார்குடும்பத்தார் கைதிகளைப்போல் அரண்மனையில் வைக்கப்பட்டதையும், புதிய ஜனநாயக ஆட்சி மக்களுக்குத் திருப்தியளிக்காததால் லெனின் கட்சி தோன்றியதையும், அக்கட்சியால் நடத்தப்பட்ட பிரமாண்டமான ஊர்வலத்தையும் படித்தீர்கள். இனி இரண்டாம்பாகத்தில் ஜனநாயக சர்க்காருக்கும், லெனின் கக்ஷிக்கும் நடக்கும் கடும் போரும், அதன் பயனுய் ஜுலை மாதத்தில் நடைபெறும் கைகலந்த தெருச்சண்டைகளும், ரத்தக்களரியும், போல்ஷ்விக்சர்கள் சட்ட விரோதமானவர்கள் என அறிவிக்கப்பட்டு அநேக தலைவர்கள் சிறையிலடைக்கப்படுவதும், லெனின் ஒளிந்துகொள்ளுவதும், பிற்பாடு திடுமென தோன்றி புதிய வலிமை பெற்று ஜனநாயக சர்க்காரைக் கவிழ்த்தி, தன்னுடைய அதிகாரத்தில் அரசாங்கத்தைக் கொண்டுவருவதும், செம்படை (Red Army) தோன்றி பிரமிக்கத்தக்க வேலைகள் செய்வதும், ஜார் குடும்பம் பரிதாபகரமான முடிவு அடைவதும், ருஷியாவின் தற்கால நிலைமையும், லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருடைய வாழ்க்கைக் குறிப்புகளும், விரிவாக வெளிவரும். அது இம் முதற்பாகத்தைக் காட்டிலும் விசேஷமானதாயிருக்கும்.

(காபிரைட்.)

# தேவை.

---

எல்லா ஊர்களிலும் 'ருஷியப் புரட்சி' புத்தகம் விற்பனை செய்வதற்கு டிபாஸிட் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரம் நேரிலாவது, தபால் மூலமாவது தெரிந்து கொள்ளலாம். பதில் அனுப்புவதற்காக ரிப்ளை கார்டாவது, ஸ்டாம்பாவது அனுப்பவேண்டும்.

தனிப்பிரதி வேண்டுவோர் 2½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

நமது விலாசம்:—

எஸ். சையது அஹமது,
கான்பாளையம் 1-வது தெரு,
மதுரை.

---

Published by S. Syed Ahmed & Printed at
The C. M. V. Press, Madura-34.